439

29

அனுப்புநர்

திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
தூத்துக்குடி.

பெறுநர்

வருவாய் கோட்டாட்சியர்,
கோவில்பட்டி.

ந.க. ஜி.எம்.1/ 137/2009, நாள்: 16.06.2009.

அய்யா,

பொருள்: மக்கள் குறை தீர்க்கும் நாள் மனு – விளாத்திகுளம் வட்டம் - பெரியசாமிபுரம் கிராமம் - கடற்கரைக்கு அருகில் கடல் மணல் அள்ளுவது – தடுத்து நிறுத்தக் கேட்டல் - தொடர்பாக.

பார்வை: மக்கள் குறை தீர்க்கும் நாள் மனு எண். 4010, நாள்: 08.06.2009. (மனுதாரர், திருமதி. அ. அம்புரோஸ் மேரி, தலைவர், பெரியசாமிபுரம்).

பார்வையில் கண்ட கடிதத்தில் தூத்துக்குடி மாவட்டம், பெரியசாமிபுரம் கிராமத்தில் கடற்கரையோரம் பெரியசாமிபுரம் கிராம நிர்வாகி என்ற பெயரில் இருக்கும் 1) ம.மரியமாணிக்கம் த-பெ. லேட். மரியபாக்கியம் (2) அ.விசுவாசம், த-பெ. அந்தோணிராயப்பன், (3).மரியபாக்கியம், த-பெ. சவரிமுத்து,, (4) ம. சூசை, த-பெ. அந்தோணிமுத்து, (5). அ.அந்தோணி சேவியர் தனபால்,த-பெ. அந்தோணிப்பாக்கியம் மற்றும் இவர்களின் முழு ஆதரவுடன் மேல்மாந்தை ஊராட்சிமன்றதலைவர் திரு. ச. சபாபதி நாள் ஒன்றுக்கு 50 லாரி மணல் அள்ளுவதாகவும், இதனால் சுனாமி போன்ற பேராபத்தில் அளிந்துவிடுவோமோ என்ற அச்சத்தில் உள்ளதாகவும், கடல் தொழில் அளிந்து விடுமோ என்ற அச்சத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனு தொடர்பாக உரிய விசாரணை செய்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அறிக்கையும், இனிவருங்காலங்களில் கள்ளத்தனமாக கனிமக் கடத்துவதை தடுத்திட எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரத்திற்கு அறிக்கையும் அனுப்பி வைக்கவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரத்திற்கான அறிக்கையை மனுதாரருக்கும் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு: ம னு நகல்.

(அ/ந)
16/6/09
மாவட்ட ஆட்சியருக்காக
தூத்துக்குடி.

நகல்: வருவாய் வட்டாட்சியர்,
விளாத்திகுளம்.

DESPATCHED ON. 17/6/09